செ.வெ.எண். 04 நாள் : 11.01.2018

# திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு, அனைத்து இறைச்சிக் கூடங்களும் மூடப்பட வேண்டும்
# பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் அறிவிப்பு

-----

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை (கால்நடை மருத்துவப்பிரிவு) கட்டுப்பாட்டில் இயங்கும் இறைச்சிக் கூடங்கள், வருகின்ற 15.01.2018 (திங்கட்கிழமை) அன்று திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு, அரசு உத்தரவின்படி அனைத்து இறைச்சிக் கூடங்களும் மூடப்படுகின்றன. இதேபோல், ஆடு, மாடு, இதர இறைச்சி விற்பவர்கள், பல்பொருள் அங்காடிகள் மற்றும் வணிக வளாகங்களில் பதப்படுத்திய இறைச்சி விற்பனை செய்யவும் தடை செய்யப்பட்டுள்ளது. எனவே, அரசு ஆணையின்படி கண்டிப்பாக 15.01.2018 (திங்கட்கிழமை) அன்று அனைத்து இறைச்சிக் கூடங்கள், பல்பொருள் அங்காடிகள் மற்றும் வணிக வளாகங்களில் பதப்படுத்திய இறைச்சிகளை விற்பனை செய்ய வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறது. அரசு ஆணையினை செயல்படுத்த வியாபாரிகள் அனைவரும் முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:** துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்
பெருநகர சென்னை மாநகராட்சி